

வேலூர் மாவட்டம் காட்பாடி தொகுதிக்குட்பட்ட பொதுமக்களுடன் நடந்த முதல்வர் திட்டமுகாம்களில் பெறப்பட்ட மனுக்களின்படி 798 பயனாளிகளுக்குரூ.10.91 கோடியிலான நலத்திட்டங்களை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் வழங்கினார். இதில் மாவட்ட ஆட்சியர் வே.இரா. சுப்புலட்சுமி, வருவாய் அலுவலர் த.மாலதி,வேலூர் மாநகராட்சி துணை மேயர் எம். சுனில்குமார், மண்டல குழு தலைவர் புஷ்பலதா, ஒன்றிய குழு தலைவர் வேல்முருகன், துணை தலைவர் எஸ்.சரவணன், ஒன்றிய கழக செயலாளர் கருணாகரன், தாசில்தார் ஜெகன், கழக பேச்சாளர் பிரம்மபுரம்பழனி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதி பாக முகவர்கள் (BLA2) ஆலோசனைக் கூட்டத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பெ.கீதா ஜீவன் உரையாற்றினார். உடன் தேர்தல் பார்வையாளர் இன்பா ஏ.என்.ரகு, மேயர் ஜெகன் பெரியசாமி, ஆனந்தசேகரன், துறைமுகம் புளோரன்ஸ், துணை மேயர் திருமதி ஜெனிட்டா செல்வராஜ், ஜி. செல்வராஜ், சி.எம்.மதியழகன், மற்றும் தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பாக முகவர்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### மதுரை மாவட்டக் கழகம் சார்பில்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பிரமாண்ட வரவேற்பு!

## விமான நிலையத்தில் அமைச்சர் பி.மூர்த்தி – மாவட்டச் செயலாளர்கள் கோ.தளபதி – மு.மணிமாறன் தலைமையில் கழகத்தினர் திரண்டனர்!

மதுரை, நவ. 10-

கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மதுரை விமான நிலையத்தில் மாவட்டச் செயலாளர், அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் மாவட்டச் செயலாளர்கள் கோ.தளபதி எம்.எல்.ஏ., மு.மணிமாறன் முன்னிலையில் மதுரை மாவட்ட திமுக சார்பில் கழகத்தினர் இரு வண்ணக் கொடி ஏந்தி உற்சாகம் மிகுந்த வரவேற்பு கொடுத்தார்கள், அதன் விபரம்:-

கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மாவட்டங்கள் முழுவதும் அரசின் நலத்திட்டங்கள் செயல்பாடுகள் குறித்து ஆய்வுப் பணி மேற்கொள்வதாக அறிவித்து முதற்கட்டமாக கோவை மாவட்டத்தில் துவங்கினார்.

அடுத்ததாக விருதுநகர் மாவட்டத்தில் இரண்டு நாட்கள் ஆய்வுப்பணிகள் மேற்கொள்ள திட்டமிட்டு சென்னையிலிருந்து விமான மூலம் மதுரை விமான நிலையம் வந்தடைந்தார். அவ்வாறு வந்த கழக தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மதுரை மாவட்ட திமுக சார்பில் மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில், மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் மு.மணிமாறன் ஆகியோர் முன்னிலையில் கழகத்தினர் இரு வண்ணக் கொடி மற்றும் வரவேற்பு பதாகைகளுடன் முத்தமிழ் அறிஞர் கலைஞர் வாழ்க, கழகத் தலைவர், முதல்வர் மு.க. ஸ்டாலின் வாழ்க, இளந் தலைவர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வாழ்க என விண்ணை முட்டும் கோஷங்கள் எழுப்பியவாறு உற்சாகம் மிகுந்த வரவேற்பு கொடுத்தார்கள்.

இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் மதுரை மாநகர், மதுரை வடக்கு, மதுரை தெற்கு மாவட்டங்களைச் சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், கழகத்தினர் என பெரும் திரளானோர் பங்கேற்றார்கள்.

## சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; ஜார்கண்ட் மாநில முதல்வர் சிபு சோரனின் தனிச் செயலாளர் வீடு உள்ளிட்ட 9 இடங்களில், வருமானவரித் துறையினர் சோதனை நடத்தி இருக்கிறார்களே ?

**பெரியதம்பி :** **ஆமாம் தம்பி; அந்த மாநில சட்டப் பேரவைக்கான தேர்தல் அடுத்த வாரம் தொடங்குகிறது. வருமானவரித் துறை சோதனை எதற்காக என்பது ஜார்கண்ட் மாநில வாக்காளர்களுக்குப் புரியாதா என்ன ? வருமானவரித் துறை, ஒன்றிய பா.ஜ.க.வின் கூட்டணியில் சேர்ந்து ஆண்டுகள் பல ஆகிவிட்டனவே ! இம்மாதிரி சலசலப்புக்கெல்லாம் சிபுசோரனும், அவரது கட்சியும் கொஞ்சமும் அஞ்சாது !**


